தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

நான்காம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

மே, சூன் - **2015**

**A051** மொழிவரலாறு - 1

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. முதலாம் இராசராசனுடைய மெய்க்கீர்த்தி எவ்வாறு தொடங்குகிறது?
2. பலுசிஸ்தான் பகுதிகளில் பேசப்படும் திராவிட மொழி எது?
3. சதுரகராதியை இயற்றியவர் யார்?
4. ‘திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்’ என்ற நூலின் ஆசிரியர் யார்?
5. குகைக் கல்வெட்டு எத்தனை வரிகளை உடையது?
6. குகைக் கல்வெட்டுகளில் மெய்யெழுத்து எவ்வாறு எழுதப்பட்டது?
7. தொல்காப்பியர் காலத்தில் வழங்கிய சார்பெழுத்துகள் மொத்தம் எத்தனை?
8. சங்க காலத் தமிழில் புதிதாக வந்து வழங்கிய தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி எது?
9. கூரம் செப்பேட்டில் ‘ஐந்தே’ என்ற சொல் எவ்வாறு காணப்படுகிறது?
10. ஆழ்வார்கள் பாடிய பாடல்களை ‘நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்’ என்ற பெயரில் தொகுத்தவர் யார்?
11. நாயக்கர் காலத் தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் செய்தவர் யார்?
12. தஞ்சையில் சரசுவதி மகால் என்ற நூல்நிலையத்தை உருவாக்கியவர் யார்?
13. சென்னைத் தமிழில் ழகர மெய் எந்த மெய்யாக ஒலிக்கப்படுகிறது?
14. ‘ஒரு பிடி சோறு’ என்ற சிறுகதைகயை எழுதியவர் யார்?
15. தமிழில் முதன்முதலில் ஏட்டில் எழுதப் பெற்ற முதல் உரை எழுது?

## பிரிவு - 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. ‘குறுமொழி’ – விளக்கம் தருக.
2. சோழர் காலக் கல்வெட்டுகளில் வடசொற்கள் தமிழாக்கம் செய்யப்பட்டிருத்தலுக்குச் சான்றுகள் காட்டுக.
3. பழங்காலத்தில் பிராமி என்ற எழுத்து வடிவம் இந்தியா முழுவதும் வழங்கிய மொழிகளில் காணப்படுவதை விளக்குக.
4. சங்கம் மருவிய காலத் தமிழில் காணப்படும் ஒலிமாற்றங்களைச் சான்றுடன் விளக்குக.
5. பல்லவர் காலத்தில் ‘நெடில் குறிலாதல்’ என்ற மாற்றம் காணப்படுவதை விளக்குக.
6. நாயக்கர் காலத் தமிழ்மொழியின் நிலையை அறிந்த கொள்ள உதவும் இலக்கியங்களைக் குறிப்பிடுக.
7. தந்தை பெரியார் செய்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி எழுதுக.
8. இருபதாம் நூற்றாண்டுத் தமிழில் காணப்படும் ‘ஓரினமாதல்’ என்னும் ஒலிமாற்றத்தைச் சான்று காட்டி விளக்குக.

## பிரிவு - 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) நடுத்திராவிட மொழிகளைப் பற்றிக் கூறப்படும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஒலிகளின் வருகை முறை பற்றிய தொல்காப்பியர் கருத்துகளைச் சான்றுடன் விளக்குக.

2. (அ) சங்கம் மருவிய காலத் தமிழில் பெயர்ச்சொல்லைப் பொறுத்தவரை நிகழ்ந்த மாற்றங்களை விவரிக்க.

(அல்லது)

(ஆ) பல்லவர் காலத் தமிழில் மெய்யெழுத்துகள் அடைந்த மாற்றங்களை வகைப்படுத்தி விளக்குக.

3. (அ) நாயக்கர் காலத் தமிழில் பல்வேறு இலக்கணக் கூறுகளில் நிகழ்ந்துள்ள மாற்றங்களைச் சான்று காட்டி விளக்குக.

(அல்லது)

(ஆ) இதழியலாளர்கள் கையாண்ட மொழிநடையின் தன்மைகளைக் கூறி விளக்குக.

✷✷✷